செ.வெ.எண்: 48 நாள்: 24-08-2021

**பத்திரிக்கை செய்தி**

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறப்பு சுருக்கத்திருத்தம் 2022-ஐ முன்னிட்டு 01.01.2022-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது நிரம்பியவர்கள் வாக்காளர் பட்டியலில் இதுவரையில் பெயர் இடம்பெறாத / சேர்க்கப்படாத வாக்காளர்கள் பெயர் சேர்த்திட மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, எதிர்வரும் 01.11.2021 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்ட பின்னர் 01.11.2021 முதல் 30.11.2021 வரையிலான நாட்களில் நாகபட்டினத்திலுள்ள அனைத்து வாக்குச்சாவடி நிலையங்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் 01.01.2022 அன்று 18 வயது பூர்த்தி அடையும் புதிய வாக்காளர்கள் தங்களது பெயரினை வாக்காளர் பட்டியலில் சேர்த்திடுதல், நீக்கம் செய்தல், திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் செய்திட சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

சிறப்பு முகாமை பொதுமக்கள் பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் முதல் முறை பெயர் சேர்ப்பதற்கான அல்லது ஒரு தொகுதியில் இருந்து மற்றொரு தொகுதிக்கு வசிப்பிடம் மாறியதால் பெயர் சேர்ப்பதற்கான படிவம்-6, வாக்காளர் பட்டியலில் வேறொரு நபரின் பெயரை சேர்க்க ஆட்சேபித்தலுக்கான/தன்னுடைய பெயரையே நீக்கக் கோருவதற்கான/ இறப்பு/ வசிப்பிடம் மாறிய காரணத்தினால் வேறொரு நபரின் பெயரை நீக்கக் கோருவதற்கான படிவம்-7, வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள விவரங்களை திருத்துவதற்கான படிவம்-8 மற்றும் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு (ஒரு சட்டமன்ற தொகுதிக்குள்) முகவரி மாற்றத்திற்கு படிவம்-8ஏ ஆகியவைகளை பூர்த்தி செய்து வழங்கிடலாம்.

இந்த சிறப்பு முகாமில் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களும் (BLO) வாக்குசாவடி நிலையிலான முகவர்கள் (BLA) சிறப்பு முகாம் நடைபெறும் நாட்களில் (தேதி பின்னர் அறிவிக்கப்படும்) காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரையிலும் மற்ற நாட்களில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரையிலும் வழங்கலாம்.

இதனைத்தொடர்ந்து, 05.01.2022 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. எனவே, இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திகொள்ளுமாறு நாகப்பட்டினம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் **மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.**

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**